பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**29 12 2025** **MONDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. கல்வித்துறையின் வளர்ச்சியில் தேசிய கல்விக்கொள்கை பெரும் மாற்றத்தை கொண்டுவந்துள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

2. பாதுகாப்பு தளவாடங்களுக்கான கொள்முதல் குழுமம் 79 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

3. தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

4. இடைநிலை ஆசிரியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற திமுக அரசு முன்வர வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

5. உலக **Blitz** செஸ் சாம்பியன் போட்டி தோஹாவில் இன்று தொடங்கியது.

**--- இனி விரிவான செய்திகள் ---**

<<<<<<<>>>>>>

கல்வித்துறையின் வளர்ச்சியில் தேசிய கல்விக்கொள்கை பெரும் மாற்றத்தை கொண்டுவந்துள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் இன்று கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

***(Sound Byte — சி பி ராதாகிருஷ்ணன் - 53 Sec.)***

<<<<<<<>>>>>>

பாதுகாப்பு தளவாடங்களுக்கான கொள்முதல் குழுமம் **79** ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது

இன்று புதுதில்லியில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

முப்படையினருக்கு அதிநவீன தளவாடங்களை கொள்முதல் செய்வதற்கு இது வகை செய்வதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<<>>>>>>

வடகிழக்கு மாநிலங்களில் இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சித் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

அஸ்ஸாம் மாநிலம் **Nagaon-**ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

அஸ்ஸாமின் வளர்ச்சிக்காக முன்னர் ஆட்சிப்பொறுப்பில் இருந்த காங்கிரஸ் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று அவர் குற்றம் சாட்டினார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டதாகவும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் நிலவி வந்த குறைகளை களையும் வகையில் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

உத்தராகண்டின் **Gaucher-**ல் நடைபெற்ற விவசாயிகள் திருவிழாவில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதாரச் சட்டம் **125** நாட்கள் வேலை வழங்க வகை செய்துள்ளதாக அவர் கூறினார்.

ஊரகப்பகுதிகளின் மேம்பாட்டிற்கு இந்த சட்டம் உத்வேகம் அளிக்கும் என்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

சென்னை, கோவை, தூத்துக்குடி விமான நிலையங்களில் பெரிய அளவில் மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், திருச்சி மற்றும் மதுரை விமான நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

மாநிலத்தில் நடைபெற்றுவரும் பணிகள் மற்றும் விமான நிலையத்தின் பெயர் மாற்றம் குறித்து சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடுவை சந்தித்து கோரிக்கை வைத்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

கோவை விமான நிலைய விரிவாக்கப்பணிகளை விரைவுபடுத்த வேண்டும், **Tuticorin** என்ற பெயரை தூத்துக்குடி விமான நிலையம் என்று மாற்றம் செய்ய வேண்டும் என்றும் தாம் அமைச்சரை வலியுறுத்தியுள்ளதாக டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், சென்னையிலிருந்து திருத்தணி செல்லும் ரயிலில், கத்தியுடன் ரீல்ஸ் எடுத்துக்கொண்டிருந்த சிறுவர்களை தடுத்த இளைஞர் கொலை செய்யப்பட்டுள்ள சம்பவத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த தாக்குதல் தொடர்பான காணொலி அதிர்ச்சி அளிப்பதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு போதைப்பொருள் பயன்பாடே காரணம் என்று கூறியுள்ள திரு எடப்பாடி பழனிசாமி, இதனை கட்டுப்படுத்த உறுதியான நடவடிக்கைகளை திமுக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>>

திமுக அரசின் நிர்வாக தோல்வி காரணமாக தூய்மைப் பணியாளர்கள் முதல் அரசு மருத்துவர்கள் வரை போராடி வருவதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், பணிநிரந்தரம், ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆரம்ப சுகாதார நிலைய பல்

மருத்துவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும், திமுக அரசு ஊழல் புரிவதிலும், விளம்பரங்களில் மட்டுமே கவனம் செலுத்துவதாகவும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

இடைநிலை ஆசிரியர்களின் சம வேலைக்கு சம ஊதியம் கோரிக்கை குறித்து தமிழக அரசு அவர்களுடன் பேச்சு நடத்த வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலர் திரு சண்முகம் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இடைநிலை ஆசிரியர்கள் மீது காவல்துறை மேற்கொண்ட நடவடிக்கை ஏற்புடையது அல்ல என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் வனப்பகுதியில், வனவிலங்குகள் கணக்கெடுக்கும் பணி இன்று தொடங்கியது.

**300-**க்கும் மேற்பட்ட வனத்துறையினர் **76** குழுக்களாக பிரிந்து இப்பணிகளை மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — ஈரோடு மூர்த்தி - 43 Sec.)***

<<<<<<<>>>>>>

கோடியக்கரை பறவைகள் சரணாலயத்தில் வெளிநாட்டுப் பறவைகளை கணக்கெடுக்கும் பணி இன்று தொடங்கியது.

வனத்துறையினர் மற்றும் மாணவர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — செல்வன் ஜெபராஜ் - 42 Sec.)***

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதிய மின்னணு குடும்ப அட்டைகளை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திருமதி அழகுமீனா அறிவுறுத்தினார்.

----------------

நாமக்கல் மாவட்டம் பழையபாளையம் ஊராட்சியில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் இன்று நடைபெற்றது.

---------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் போதைப்பொருள் வைத்திருந்தது தொடர்பாக மூன்று பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக **Blitz** செஸ் சாம்பியன் போட்டி தோஹாவில் இன்று தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் குகேஷ் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

-----------------

உலக **Rapid Chess** சாம்பியன் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற அர்ஜுன் எரிகேசி மற்றும் கோனேரு ஹம்பிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

-----------------

விஜய் ஹசாரே கோப்பைக்கான கிரிக்கெட் போட்டியில் இன்று அகமதாபாதில் நடைபெற்ற ஆட்டத்தில் கர்நாடகா **4** விக்கெட் வித்தியாசத்தில் தமிழகத்தை வென்றது.

-----------------

தீயணைப்புத் துறையினருக்கான மண்டல விளையாட்டு போட்டிகள் செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூரில் இன்று தொடங்கின.

**<<<<<<<<END>>>>>>>**